[1980 பிப்ரவரி 11

[முற்பகல் 9-30]

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே. 30 கோடிக்கு மேற்பட்ட செலவு மதிப்புடைய பாசனத் திட்டத்திற்கும், 30 கோடிக்குக்கீழ் மதிப்புள்ள இரு பெரிய பாசனத் திட்டங்கள ஒவ்வொன்றுக்கும் அரசாங்க அதிகாரிகளை இந்த குழுவின்கீழ் போட்டிருக்கிறார்கள். இந்தக் கமிட்டியிலும், சிறு பாசனத் திட்டங்களை ஒருங்கிணைக்கவும் கண்காணிக்கவும். மறு ஆய்வு செய்யவும் ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் போடப்படும் கமிட்டியிலும், வங்கிகளுக்குக் கூட பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெளியிலேயும் ஒவ்வொரு துறையிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதிகளைப் போட்டு சட்டமேலவை பேரவை உறுப்பினர்களையும் போட்டு இக் குழுக்களை நடத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்துடைய ஆணைக்கிணங்க இது குறித்து ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு பாசனத் துறையைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு அதிலே சட்டமன்ற மேலவை பேரவை உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அவைகளின் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, வேறு ஆலோசனைக் குழு அமைக்கும் திட்டம் அரசினுடைய ஆய்வில் இல்லை.

செடிப் பண்ணைகள்.

* வினா எண் 114—திரு சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் எங்கெங்கு செடிப் பண்ணைகள் இருக்கிறது?

(ஆ) அதன் மூலம் ஏதாவது பயன் ஏற்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

[357-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.